முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2023) சென்னை, எழிலகத்தில் உள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, ஒடிசா இரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களை தொடர்பு கொள்வதற்கும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதற்கும், மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, வருவாய் நிர்வாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திபாபு, பொதுத்துறை செயலாளர் (பொறுப்பு) முனைவர் டி. ஜகந்நாதன், பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் எஸ்.ஏ. ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2023) சென்னை, சென்ட்ரலில் உள்ள தெற்கு இரயில்வே தலைமை கட்டுப்பாட்டு அறைக்கு நேரில் சென்று, ஒடிசா இரயில் விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த தமிழ்நாட்டினர் பற்றிய விவரங்களையும், அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் குறித்த விவரங்களையும் இரயில்வே உயர் அலுவலர்களுடன் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திரபாபு, பொதுத்துறை செயலாளர் (பொறுப்பு) முனைவர் டி. ஜகந்நாதன், தெற்கு இரயில்வே மண்டல துணை மேலாளர் கணேசன், துணை மேலாளர் (வணிகம்) அஸ்வின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2023) சென்னை சென்ட்ரலில் உள்ள பயணிகள் விசாரணை மற்றும் உதவி மையத்திற்கு நேரில் சென்று, ஒடிசா இரயில் விபத்து குறித்து பெறப்பட்ட அழைப்புகளின் விவரங்கள் குறித்தும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திரபாபு, பொதுத்துறை செயலாளர் (பொறுப்பு) முனைவர் டி. ஜகந்நாதன், தெற்கு இரயில்வே உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ரயில் விபத்து: உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில்

அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 4-

"ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 3.6.2023-அன்று நடைபெறவிருந்த அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று ஒடிசா மாநிலத்தில் ஏற்பட்ட இரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ளதோடு, முதலமைச்சர் அவர்கள், இரயில் விபத்தில் காயமடைந்தவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதாகவும், தேவைப்படின், தமிழ்நாட்டின் மருத்துவக் குழு மற்றும் இதர உதவிகளை அனுப்பி வைப்பதாகவும் ஒடிசா மாநில முதலமைச்சரிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துக் கொண்டார்.

மேலும், மீட்பு பணிகளில் உடனிருந்து தமிழ் நாட்டினருக்குத் தேவையான உதவிகளைச் செய்திட போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக் ஆகியோர் கொண்ட குழு விபத்து நடைபெற்ற ஒடிசா மாநிலத்திற்கு விரைந்து செல்ல தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில் ஒடிசா இரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 3.6.2023 அன்று ஒரு நாள் மட்டும் துக்கம் அனுசரிக்கப்படும். மேலும், அரசின் சார்பில் 3.6.2023 அன்று நடைபெறவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

ரெயில் விபத்தில் காயமடைந்தவர்களை மீட்க தேவையான உதவிகள்:

ஒடிசா முதல்வருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் பேசினார்!

அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - எஸ்.எஸ்.சிவசங்கர் - அதிகாரிகள் விரைந்தனர்!

சென்னை, ஜூன் 4-

ஒடிசாவில் இருந்து சென்னைக்குப் புறப்பட்ட கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரெயில் நேற்று முன்தினம் இரவு புவனேஸ்வர் அருகே சரக்கு ரெயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் அவர்களை தொடர்புகொண்டு விபத்து குறித்து விசாரித்து தனது அதிர்ச்சியையும், ஆழ்ந்த வருத்தத்தினையும் தெரிவித்ததுடன் தமிழ்நாடு அரசு காயமடைந்தவர்களை மீட்க உடனடியாக மருத்துவக்குழுவையும், தேவையான உதவிகளையும் அனுப்பி வைப்பதாக தெரிவித்தார்.

மேலும் மீட்புப் பணிக்காக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர், அதிகாரிகளை உடனடியாக ஒடிசாவிற்கு அனுப்பி வைத்தார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.06.2023) ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் அவர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, இரயில் விபத்து குறித்து விசாரித்து தனது அதிர்ச்சியையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்தார். மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இரயில் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வதாகவும், தேவைப்படின், தமிழ்நாட்டின் மருத்துவக் குழு மற்றும் இதர உதவிகளை அனுப்பி வைப்பதா கவும் ஒடிசா மாநில முதலமைச்சரிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் மீட்பு பணிகளில் உடனிருந்து தமிழ் நாட்டினருக்குத் தேவையான உதவிகளைச் செய்திட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக், ஆகியோர் கொண்ட குழு விபத்து நடைபெற்ற ஒடிசா மாநிலத்திற்கு விரைந்து செல்ல தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இவ்விபத்து குறித்து தகவல்களை அளிக்க கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்தின் தொலைபேசி எண்கள்:

Toll Free No. 1070
Mobile No. 94458 69843
WhatsApp No. 94458 69848
Landline 0442859 3990

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மழை நீர்வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1571 /2023

இரு உறை குறுகிய கால முறையில் மின்னணு மறு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிவிப்பு

வ. எண்	கோப்பு எண் மற்றும் பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன்வைப்பு தொகை	ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு
1	ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1571-2/2023 மண்டலம்-5, வார்டு-56, 57, 61 மற்றும் 63 உள்ள தங்கசாலை தெரு மற்றும் கெங்கு ரெட்டி தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி சிப்பம்-35 மற்றும் 40 குறுகிய கால ஒப்பம்	ரூ.682.44 மற்றும் ரூ.542.21	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு -1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 19.06.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 20.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 2827 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்புபொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

பெம்மானைப் பாடுதும்; அம்மானை ஆடுதும்!

திருக்குவளை பிறந்தவனை,
செங்கழனி விளைகின்ற
திருவாரூர் வளர்ந்தவனை,
செந்தமிழ்க் கொடியேந்தித்
தெருமுழங்கி நடந்தவனை,
திரைபோட்டே இந்திப்பெண்
வருங்கொடுமை
எதிர்த்தவனை
வாதாடி எழுந்தவனை,
செருவுக்கும் அஞ்சானை,
சிறைசெல்லத் தயங்கானை
அரும்பாக இருக்கையில்
அலராக மணந்தவனை
இருபதும் நிரம்பாமுன்
இளைமைபலி வரைந்தவனை,
குருத்திலே கொற்றவனைக்
கூறுதும்காண் அம்மானை!

இரும்பான உளத்தவனை
இயக்கத்தில் உயிர்த்தவனை,
கரும்பாக மொழிந்தவனை,
காலம்பொன் என்றவனை,
சுரும்பாகப் பறந்தவனை,
சொன்னதைச் செய்தவனை,
துரும்பாக நினைத்தவர்முன்
தூணாக நின்றவனை
இரவுபகல் எப்போதும்
இயக்கத்திற்கு உழைத்தவனை
புரிநூலார் கட்டிய
பொய்மூட்டை அவிழ்த்தவனை
வரிகளில்தீப் பொரிகளை
வளர்த்திட்ட வல்லவனை,
பரம்பொருள் கருதானைப்
பாடுதும்காண் அம்மானை!

கருவிலே தமிழ்கொண்டான்
கலையிலே கரைகண்டான்
உருவிலே அழகுற்றான்
உணர்ச்சியில் அளவற்றான்
செருவிலே களங்கொண்டான்
செம்மொழிப் புகழ்கொணர்ந்தான்
திருக்குறள் மனங்கொண்டான்
செம்மாந்த இனம்கண்டான்
கரிகாலன் வழிவந்தோன்
காவிரி கைக்கொண்டான்
பெரியாரின் பின்நின்று
பேரறிஞர் அண்ணாவின்
சரியான வழிசென்று
தலைமையும் ஏற்றவனை,
பரிவாக யாம்ஆடிப்
பாடுதும்காண் அம்மானை!

பெருஞ்சாதி ஆதிக்கம்
பிடுங்கியே எறிந்தவனை
இருட்சாதி ஒழிக்கவே
எப்போதும் முயன்றவனை
வரும்பொருள் உரைத்தவனை
வசைமொழி பொறுத்தவனை,
திரும்பிப்பார் செல்லுமுன்
சிங்கம்போல் என்றவனை,
விரும்பிச்செய் கடமையே
விழைந்திடு கண்ணியம்
அருங்கட்டுப் பாடுதான்
அகங்கொள்ளச் சொன்னவனை
அருந்துநீர் போன்றவனை
அறம்வெல்லும் என்றவனை
இருந்தாடி யாமிங்கே
ஏத்துதும்காண் அம்மானை!

கருந்தாரைக் கையேந்திக்
களங்கபுரம் டால்மியா
பொருந்தாதென் றழித்தவனை,
புறப்பட்ட ரயில்முன்னே
வருந்தாமல் தலைவைத்து
மறவனாய்ப் படுத்தவனை,
பெருந்தீதாம் இந்திப்பேய்
பிடித்திடின் நமையென்று,
திருந்தாத தில்லிக்குத்
தீயச்சம் தந்தவனை,
கருந்தேளும் கொடும்பாம்பும்
கடுங்கட்டாந் தரையுமே
இருந்தாளும் தனிச்சிறையில்
எஃகாக இருந்தவனைப்
புரந்திங்கே யாம்ஆடிப்
புகலுதும்காண் அம்மானை!

பதின்மூன்று தேர்தலில்
பகைத்தவரை வென்றானை
உதிரந்தான் போனாலும்
உரிமைக்கு நின்றானை
அதிரத்தான் முழங்கியே
அனைத்தூரும் சென்றானை,
எதிர்த்தாலும் அணுவளவும்
இலக்கிலே குன்றானை
விதித்தாலும் தடைபல
வேழமாய் முறித்தானை,
சதிபல செய்தோரின்
தந்திரம் பறித்தானை,
குதிரைபோல் பாய்வதைக்
கொஞ்சமும் நிறுத்தானை,
துதித்தாரைப் பொறுத்தானைச்
சொல்லுதும்காண் அம்மானை!

பேராசிரியர்

மா.செல்வராசன்

அண்ணாதான் மறைந்தபின்
அவலந்தான், இவ்வியக்கம்
மண்ணாகப் போகுமென
மனப்பாலைக் குடித்திருக்க,
எண்ணாத உயரத்தில்
ஏறியே ஒளிர்ந்தவனை,
கண்ணாக ஆட்சியும்
கழகமும் காத்தவனை,
உண்ணாமல் உறங்காமல்
ஓயாமல் உழைத்தவனை,
பெண்கட்குச் சொத்துரிமை
பேறுபல அளித்தவனை,
பண்பட்ட அரசியலில்
பாண்டியன் ஆனவனைப்
பண்கூடி விளையாடிப்
பாடுதும்காண் அம்மானை!
நாடகத்தில் திரைப்படத்தில்
நவின்றபல கருத்துகளால்
ஈடற்ற இயக்கத்திற்கு
எழுச்சியினைத் தந்தவனை,
கேடற்ற படைப்புகளால்
கிளர்ச்சியை வளர்த்தவனை
ஏடற்ற மக்களிடம்
எண்ணத்தை விதைத்தவனை,
கூடற்ற பறவைகட்குக்
கூடுகள் கொடுத்தவனை
நாடற்ற தமிழர்க்கு
நற்காப்பும் எடுத்தவனை,
பீடற்ற இந்திமொழிப்
பெருந்திணிப்பைத் தடுத்தவனைப்
பாடுபல பட்டவனைப்
பாடுதும்காண் அம்மானை!
பைந்தமிழ் நாட்டிற்குப்
பகலவன் ஆனவனை,
ஐந்துமுறை முதல்வராய்
ஆட்சியில் அமர்ந்தவனை,
மைந்தனைத் தலைவனாய்
மலர்ந்திடச் செய்தவனை
நைந்திடாது தமிழ்நாடு
நன்னிலைக்கு உயர்த்தினானை,
செந்தமிழை உலகேற்கச்
செம்மொழி ஆக்கினானை
வந்தமொழி எதுவெனினும்
வால்நறுக்கி விட்டவனை
வந்தித்தே யாம்ஆடி
வழங்குதும்காண் அம்மானை!

மூன்றெழுத்து அண்ணா
முன்கண்ட கழகமாம்
மூன்றெழுத்து தி மு க,
மூவேந்தர் ஒன்றிணைந்து
தோன்றிடும் இயக்கமாய்த்
துலங்குமெனச் சொன்னவனை
ஊன்றுகோல் மட்டுமல்ல
உரிமைக்கோல் உறவுக்கோல்
சான்றுகோல், எதிரிகளைத்
தாக்குங்கோல், வீரத்தை
ஈன்றகோல்,தமிழரை
இணைக்குங்கோல்
இயக்குங்கோல்
நோன்றகோல் போல்வலிமை
நூறுநூறு நுவன்றவனை
மூன்றிள மங்கையர்யாம்
மொழிகுதும்காண்
அம்மானை!

அன்றும்உன் எழுதுகோல்
ஆக்கிய படைப்புகளால்
பொன்றிய எதிர்ப்புகள்
பொடிப்பொடியாய்ப்
போனதுபோல்
இன்றும்உன் எழுதுகோல்
எழும்அலை கடலிடை
நின்றுயர வானோக்கி
நிறுவினால் எதிர்த்திட
ஒன்றிரண்டு பேர்வழிகள்
ஓரெழுத்தும் எழுதறியார்
மென்றிருப்பார் , கூலிக்கு
மேலடிப்பார் வாயடிப்பார்!
பன்றிகள் எனக்கூறப்
பண்பாடு தடுக்கிறதே
நன்றிதான் இருந்தாலோ
நாவுந்தான் தடுக்காதே!
என்றுதான் திருந்துவரோ
ஈனரின் ஈனர்கள்!
குன்றுதான் குலுங்காது;
குறுநரி ஊளைகள்
குன்றித்தான் போகுமே;
குரல்வற்றிச் சாகுமே!

என்றும்போல் நூறாண்டும்
எழுந்ததே கொண்டாட!
ஒன்றுபோல் கூடுவோம்
உயர்அருமை பாடுவோம்
குன்றுயர ஆடுவோம்
குலநலம் நாடுவோம்
சென்றுயரும் வானம்போல்
திகழுமுன் புகழெங்கும்!
கன்றிள மங்கையர்யாம்
களித்துமகிழ்ந்து ஆடியே
வென்றுயர்ந்த கலைஞராம்
வித்தகப்
பெம்மானை
நன்றுய்ய என்றென்றும்
நவிலுதும் அம்மானை!

ஜூன் 5ந்தேதி புதுக்கோட்டையில்

கழகத் தலைவர் பங்கேற்கவிருந்த பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு!

மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஜூன் 4-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்ல பாண்டியன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

ஜல்லிக்கட்டு பேரவைகளின் சார்பில் ஜூன் 5 ஆம் தேதி கழக தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு நடைபெறவிருந்த பாராட்டு விழா பொதுக் கூட்டம் ஒடிசா ரெயில் விபத்து காரணமாக தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகிறது.

தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு தமது அறிக்கையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் கூறி உள்ளனர்.